**IN THE COURT OF JUDICIAL MAGISTREATE, (FTC) ERANIEL**

***DEPOSITION OF WITNESS***

(Chapter XXIII Code of Criminal Procedure, 1973 and Rule 42 and Judicial Form No. 53 of Criminal Rules of practice 2019 )

***STC. 1/2023 P.W. 1***

| | | | | | |
|---|---|---|---|---|---|
| **Name** | : | **திருமதி. ஆக்னஸ் ஷீபா** | **Caste** | : | |
| **Father's Name** | : | த/பெ. யுவானிஸ் | **Calling** | : | |
| **Village** | : | | **Religion** | : | |
| **Taluk** | : | | **Age** | : | |

**Solemnly affirmed in accordance with the provisions of Section 4 of Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the day 17.11.2023**

**முதல் விசாரணை தொடர்ச்சி**

எனது தரப்பில் மேலும் ஒரு ஆவணத்தை குறியீடு செய்ய வேண்டியிருப்பதால் இன்று நான் எனது தரப்பில் நான் இன்று 27.01.2023ம் தேதி பாரத ஸ்டேட் வங்கி கருங்கல் கிளையில் நகை அடகு வைத்தற்கான குறிப்பாணை நகலை தாக்கல் செய்கிறேன். மேற்படி குறிப்பாாணை வா.சா.ஆ.5 ஆகும். எனவே, எனது புகாரின் அடிப்படையில் நான் கேட்ட பரிகாரத்தை வழங்க வேண்டுமென்று நீதிமன்றத்தை வேண்டிக் கேட்டுக்கொள்கிறேன்.

குறுக்கு விசாரணை

நான் மூன்றரை வருடங்களாக வழக்கறிஞராக பணிபுரிந்து வருகிறேன். நான் வருமான வரி செலுத்துபவர் அல்ல. வருடத்திற்கு எனக்கு எவ்வளவு வருமானம் கிடைக்கும் என்றால் குறிப்பாக சொல்ல முடியாது. உத்தேசமாகவும் சொல்லமுடியாது, நான் கணக்கீடு செய்து வைக்கவில்லை. எனக்கு வருமான வரி சட்டதிட்டங்கள் நன்றாக தெரியும் என்றால் சரிதான். ரொக்க பணமாக ஒரு நபருக்கு எவ்வளவு தரலாம் என்று தெரியுமா என்றால் எனக்குத் தெரியாது.

*2.* ரொக்க பணத்தை ஒரு குறிப்பிட்ட அளவு தான் தரமுடியும் என்று எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. நான் சட்டம் படித்தவர் என்பதால் எனக்கு மேற்படி விவரங்கள் தெரியும் என்றும் நான் வழக்கிற்காக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. குற்றம் சுமத்தப்பட்ட நபரை எனக்கு ஒன்றரை வருடங்களாக தெரியும். *2021* ஆகஸ்ட் முதல் தெரியும்.

*3.* குற்றம் சுமத்தப்பட்ட நபர் எந்த ஸ்டேண்டில் வாகனம் ஓட்டுகிறார் என்றால் எனக்கு தெரிந்த வரையில் கருங்கல், பாலப்பள்ளம். குற்றம் சுமத்தப்பட்ட நபரின் வீடு எனக்குத் தெரியும். குற்றம் சுமத்தப்பட்ட நபரின் வீட்டிற்கும் எனது வீட்டிற்கும் இடையே சுமார் *6* கி.மீ தூரம் இருக்கும். நான் இந்த வழக்கு பணத்தைத் தவிர்த்து அதற்கு முன் பணம் எதுவும் கொடுக்கவில்லை.

*4.* நான் வேறு யாருக்காவது பணம் கடன் கொடுத்துள்ளேனா என்றால் இல்லை. எனது கணவரின் வீடு நாகர்கோவிலில் உள்ளது. நான் விவாகரத்துப் பெற்றுவிட்டேன். எனது அம்மா பெயர் நளினகுமாரி. அவருக்கு பணம் வட்டிக்கு கொடுக்கும் தொழில் உள்ளது என்றால் இல்லை. எனக்கும் வழக்கறிஞர் தொழில் தவிர வட்டிக்கு பணம் கொடுக்கும் தொழில் இல்லை என்று சொன்னால் சரிதான். நான் வழக்குப் பணத்தை

வட்டிக்கொடுத்தேனா அல்லது கடனாக கொடுத்தேனா என்றால் கடனாக தான் கொடுத்தேன். அப்படிக் கொடுக்கும் போது அதற்கு அத்தாட்சி எதுவும் வாங்கவில்லை.

*5.* நான் குற்றம் சுமத்தப்பட்ட நபருக்கு அன்றைய தேதியிலேயே அவர் கேட்டு நான்அன்றைய தேதியிலேயே பணம் கொடுத்துவிட்டேனா என்றால் இல்லை, *10* தினங்களுக்கு முன்பாக கேட்டார். நான் அந்த தேதியில் நகையை அடகு வைத்துக் கொடுத்தேன். இந்த விவரங்களை நான் எனது புகார் மனுவிலோ, முதல்விசாரணை சாட்சியத்திலோ குறிப்பிட்டுள்ளேனா என்றால் இல்லை.

*6.* நான் எங்கு வைத்து பணம் கொடுத்தேன் என்றால், எங்கள் வீட்டில் வைத்துக் கொடுத்தேன். பணம் கொடுக்கும்போது யார் யார் உடனிருந்தார்கள் என்றால் என் அம்மா உடனிருந்தார். அப்பா இருந்தாரா என்று கவனிக்கவில்லை. அவர் உடல்நிலை சரியில்லாதவர். நான் மதியம் *02.00* மணியிலிருந்து *03.00* மணிக்குள் கொடுத்தேன். நான் அவருக்கு போண் பண்ணி வரச்சொல்லி பணம் கொடுத்தேன்.

*7.* குற்றம் சுமத்தப்பட்ட நபர் பெரிய நிலக்கிளரா என்றால் அது எனக்குத் தெரியாது. அவர் எவ்வாறு பணம் திருப்பிக்கொடுப்பார் என்பதை தெரிந்துக்கொண்டு பணம் கொடுத்தேனா என்றால் - ஆம், அவர் வீடு கட்டியதில் லோண் வரும் என்று சொன்னார். நான் வீட்டைச் சென்று பார்த்தேனா என்றால் - ஆம் பார்த்தேன். வீடு வேலை நடந்துக்கொண்டிருந்ததா என்றால் ஆம் நடந்துக்கொண்டிருந்தது. நான் குற்றம் சுமத்தப்பட்ட நபர் வீட்டிற்கு *2, 3* தடவைகள் சென்றிருப்பேன்.

*8.* நான் தினமும் அவரது ஆட்டோவில் தான் பயணிப்பேனா என்றால் எப்போதாவது தேவைப்படும் பொழுது பயணிப்பேன். நான் குற்றம் சுமத்தப்பட்ட நபர் லோண் அப்ளை பண்ணியதாக என்னிடம் சொல்லியதாக சொன்னதைப் பொறுத்து அது குறித்த ஆவணங்களை நான் பார்த்து தெரிந்துக்கொண்டேனா என்றால் இல்லை, அவர் மனைவியும் சொன்னார். அதனால் நம்பினேன். நான் மேற்படி அனைத்து சங்கதிகளையும் பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல.

*9.* குற்றம் சுமத்தப்பட்ட நபரை எனக்குத் தெரியாது என்றாலும், வழக்கிற்காக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல. நான் இந்த வழக்கில் கொடுத்ததாக சொல்லப்படும் தொகைக்காக மேற்படி வா.சா.ஆ *5* ஆன ஆவணத்திலுள்ள நகைகளை அடகு வைக்கவில்லை என்று சொன்னால் சரியல்ல. நான் உண்மையிலேயே அவ்வாறு நகையை வைத்து வழக்குத் தொகையை கொடுத்திருந்தால் அதை நான் என்னுடைய வழக்கறிஞர் அறிவிப்பிலும், புகாரிலும், முதல் விசாரணை சாட்சியத்திலும் சொல்லியிருப்பேன் என்றும் மேற்படி ஆவணத்தை முதலிலேயே தாக்கல் செய்திருப்பேன் என்று சொன்னால் சரியல்ல.

*10.* நான் தொழில் ரீதியாக காசோலை வழக்குகளை நடத்தியுள்ளேனா என்றால் இல்லை. *28.02.2023* ம் தேதி தான் வழக்கு காசோலை கொடுக்கப்பட்டது. மேற்படி காசோலையும் எனது வீட்டில் தான் வந்துக்கொடுத்தார். நான் சொல்வது போல் வழக்கு காசோலையை குற்றம் சுமத்தப்பட்ட நபர் எனக்கு கொடுக்கவில்லை என்றால் சரியல்ல. காசோலையை என் முன் நிரப்பினாரா என்றால் இல்லை, நிரப்பி தான் கொண்டு வந்தார். கையெழுத்தையும் என் முன் போடவில்லை, போட்டு தான் கொண்டு வந்தார்.

*11.* மேற்படி காசோலையை பெறும் போது அதற்கு அத்தாட்சி எதுவும் நான் கொடுத்தேனா என்றால் இல்லை. நான் நகையை வங்கியில் வட்டிக்கு அடகு வைத்ததைப் பொறுத்து குற்றம் சுமத்தப்பட்ட நபருக்கு அதன் தொகையை கொடுத்ததாக சாட்சியம் அளித்துள்ளதைப் பொறுத்து நான் மேற்படி வங்கியில் உள்ள வட்டி சம்மந்தமாக ஏதேனும் தொகையை நான் குற்றம் சுமத்தப்பட்ட நபரிடம் கேட்டேனா என்றால் அவராக தருவார் என்று நினைத்திருந்தேன்.

*12.* நான் வட்டி வாங்காமல் குற்றம் சுமத்தப்பட்ட நபருக்கு மேற்படி தொகையை தரும் அளவுக்கு எங்களுக்குள் பழக்கம் எதுவும் இல்லை என்றால் நம்பிக்கையின் பேரில் தான் கொடுத்தேன். நான் தக்கலை நீதிமன்றத்தில் வாதியாக ஒரு காசோலை வழக்கு நடத்தி வருகிறேனா என்றால் இல்லை. வழக்கறிஞர் அறிவிப்பினை குற்றம் சுமத்தப்பட்ட நபர் பெற்றுக்கொண்டாரா என்றால் அவர் மனைவி பெற்றுள்ளார். இந்த வழக்கானது முறைப்படி தாக்கல் செய்யப்படவில்லை என்று சொன்னால் சரியல்ல. குற்றம் சுமத்தப்பட்ட நபருக்கும் இந்த வழக்கிற்கும் எந்த சம்மந்தமும் இல்லை என்றாலும் என்னிடம் எந்த பணமும் பெறவில்லை என்றாலும் சரியல்ல.
குறுக்கு விசாரணை - முடிக்கப்பட்டது.

சாட்சி சொல்லி என்னால் எடுத்துச் சொல்லப்பட்டு, தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு, மேற்படி சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு அவரால் சரியானதென்று ஏற்கப்பட்டது.

நீதித்துறை நடுவர்,
விரைவு நீதிமன்றம்,
இரணியல்.